



# முதியோரை உரையாடலில் ஈடுபடுத்தும் தொடக்க உதவித்தொகுப்பு





## சடங்குகளும் கொண்டாட்டங்களும்

## நன்றியுரை

இத்தொகுப்பின் தயாரிப்புக்குப் பங்களித்த எங்களின் பங்காளிகள், சமூகச் சேவை அமைப்புகள், சமூகப் பராமரிப்புத் துறையினர், மூத்தோர், தொண்டூழியர்கள் ஆகியோருக்கு தேசிய மரபுடைமைக் கழகம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது. முதியோரை உரையாடலில் ஈடுபடுத்தும் தொடக்க உதவித்தொகுப்பின் முதல் இரண்டு தொடர்களைக் கூட்டிணைந்து தயாரித்த தேசிய சமூகச் சேவை மன்றத்திற்கும் எங்களின் நன்றி.

### பங்காளிகளும் சமூகச் சேவை அமைப்புகளும்

ஆங்லிக்கன் மூத்தோர் நிலையம், ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பு, சிங்கப்பூர் வழிகாட்டி நாய்கள் லிமிடெட், ஆரஞ்ச் வேலி மூத்தோர் நடவடிக்கை நிலையம் (உட்லண்ட்ஸ் பீக்), சேஜ் ஆலோசனை நிலையம், செங்காங் சமூக மருத்துவமனை, செயின்ட் ஆன்ட்ரூஸ் தாதிமை இல்லம், செயின்ட் ஆன்ட்ரூஸ் மூத்தோர் பராமரிப்புச் சேவை

### மையக் குழு உறுப்பினர்கள்

- திருவாட்டி மெண்டி லிம், உதவி மேலாளர், மூத்தோர் மையங்கள் (கல்வி மற்றும் சமூக எட்டுதல்), தேசிய மரபுடைமைக் கழகம்
- திருவாட்டி ஜின்சியான் பாங், திட்டப்பணி அதிகாரி, மூத்தோர் மையங்கள் (கல்வி மற்றும் சமூக எட்டுதல்), தேசிய மரபுடைமைக் கழகம்
- திரு டொன் இயூ, நிர்வாகி, சேஜ் ஆலோசனை நிலையம்
- திருவாட்டி பிரபா டெக்னா மிட்டி, மூத்த சமூகப் பணியாளர், செங்காங் சமூக மருத்துவமனை
- திரு சுவா பக் சியாங், திருவாட்டி சுவா யொக் பெங் லொரேன், திருவாட்டி கெர்ரி கிட்டரஸ் சம்ப்ரானோ, திருவாட்டி லிம் பீ ஹொங் சிண்டி, டாக்டர் சோனா பிரனவ் குமார், திருவாட்டி சில்வியா கோஸ்டா, திருவாட்டி டான் டீ கெங், திருவாட்டி வாங் குவெய் ஃபாங், திருவாட்டி வோங் லே கியாவ் ரெஜினா, மற்றும் தொண்டூழியர்கள் அனைவருக்கும் சிறப்பு நன்றி.

### உரையாடலில் ஈடுபடுத்தும் தொடக்க உதவித்தொகுப்பைப் பற்றிய விவரம்

முதியோரை உரையாடலில் ஈடுபடுத்தும் உதவித்தொகுப்பு என்பது தேசிய மரபுடைமைக் கழகத்தால் தயாரிக்கப்பட்ட வளங்களின் தொகுப்பாகும். ஒவ்வொரு தொகுப்பிலும் ஒரு கருப்பொருளைச் சார்ந்த 20 படங்கள் இருக்கும். ஒவ்வொரு படத்திற்கும் சில கேள்விகள் இருக்கும். மூத்தோர், அவர்களது குடும்பத்தினர், பராமரிப்பாளர்கள், தொண்டூழியர்கள் ஆகியோருக்கு இடையில் அர்த்தமுள்ள உரையாடலைத் தூண்டுவது இதன் நோக்கம். இந்த தொடக்க உதவித்தொகுப்புகள், 2018 முதல் பல்வேறு சமூகப் பராமரிப்புச் சூழல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மூத்தோருடன் கலாசாரம் சார்ந்த உரையாடலைத் தொடங்குவதற்கு இது நல்லதோர் அறிமுகக் கருவியாகப் பயன்படுகிறது.

## தொடக்க உதவித்தொகுப்பைப் பயன்படுத்துவது எப்படி

எப்போதுமே ஒவ்வோர் அங்கத்திற்கும் முன்பாக, உதவித்தொகுப்பின் உள்ளடக்கத்தையும் கருப்பொருளையும் முழுமையாகப் படித்து தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.

### நேர்முகமான நடவடிக்கை




1. உங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, நடவடிக்கையின் நோக்கத்தை எடுத்துச் சொல்லுங்கள்.
2. படம் பங்கேற்பாளரையும், பனுவல் உங்களையும் பார்த்தபடி இருக்கும்போது தொடங்குங்கள்.
3. உரையாடலைத் தொடங்க அல்லது விரிவுபடுத்த, கேள்விகளை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்துங்கள்.
4. நேரம் இருந்தால், ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள QR குறியீடுகளை வருடி, இணைய வளங்களையும் காணொளிகளையும் காணுங்கள்.

### சடங்குகள், கொண்டாட்டங்களின் பட்டியல்

1. சிங்கே ஊர்வலம்
2. சீனப் புத்தாண்டு
3. தைப்பூசம்
4. குவான் யின்னின் பிறந்தநாள்
5. ஈஸ்தர்
6. சிங் மிங் திருவிழா*
7. விசாக தினம்
8. நோன்புப் பெருநாள்
9. தீமிதி
10. கடல்நாகப் படகுத் திருவிழா
11. தேசிய நாள்
12. பசிப் பேய் (Hungry Ghost) திருவிழா
13. இலையுதிர்க்காலத் திருவிழா
14. தீபாவளி
15. குசு தீவு
16. கிறிஸ்மஸ்
17. பிறந்தநாட்கள்
18. பிள்ளைபேறு பாரம்பரியங்கள்
19. இறுதிச்சடங்குகள்*
20. திருமணங்கள்

*இந்தத் தலைப்புகளின்கீழ் மரணம் தொடர்பான படங்கள் இருக்கலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். பங்கேற்பாளர்களில் சிலருக்கு அவை பாதிக்கும் வகையில் இருக்கக்கூடும் என்பதால், சூழ்நிலைக்கேற்ப முடிவெடுங்கள்.

### குழு நடவடிக்கை



1. பங்கேற்பாளர்களை மேசையைச் சுற்றி அல்லது ஓர் இடத்தில் ஒன்றுசேருங்கள்.
2. ஒவ்வொரு பங்கேற்பாளராலும் உங்களைப் பார்க்க முடிவதை உறுதிப்படுத்துங்கள்.
3. உங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, நடவடிக்கையின் நோக்கத்தை எடுத்துச் சொல்லுங்கள்
4. தொகுப்பில் படம் உள்ள பக்கத்தைத் தெளிவான கோணத்தில் தூக்கிப்பிடித்துக் காட்டுங்கள்.
5. பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவராகப் படத்தைப் பற்றிய எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பு கொடுங்கள்.
6. அவர்கள் காண்பதை வர்ணிக்கச் சொல்லி, படத்தின் பொருள்/மையக்கரு பற்றிய எண்ணங்களை வெளிப்படுத்த ஊக்கம் கொடுங்கள்.
7. பங்கேற்பாளர்களிடம் பகிர்ந்துகொள்ள கதைகள் இருந்தால், கேள்விகளைப் பயன்படுத்தி அவர்களுக்கு இடையில் இயல்பான உரையாடல் உருவாக அனுமதியுங்கள்.

Roots


இன்னும் பல காணொளிகள், கதைகள், வளங்களுக்கு, தேசிய மரபுடைமைக் கழகத்தின் Roots.gov.sg இணையத்தளத்தை நாடுங்கள்.

**உங்கள் கருத்துகளை நாங்கள் கேட்டறிய விரும்புகிறோம்!**

உரையாடலில் ஈடுபடுத்தும் தொடக்க உதவித்தொகுப்பு பற்றிய கருத்துகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

https://go.gov.sg/nhb-cskfeedback

# ஆர்ச்சர்ட் சாலையில் சிங்கே ஊர்வலப் படைப்பாளர்கள், 1980கள்



**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1211520

# ஆர்ச்சர்ட் சாலையில் சிங்கே ஊர்வலப் படைப்பாளர்கள், 1980கள்

## பின்னணி:

1980களில் ஆர்ச்சர்ட் சாலையில் சிங்கே ஊர்வலத்தில் பங்கெடுத்த பொய்க்கால் நடையர்கள், சிங்க நடனமணிகள், பெரிய பொம்மைத்தலை கலைஞர்கள்.

சிங்கே ஊர்வலம், சீனப் புத்தாண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக ஆண்டுதோறும் சிங்கப்பூரில் நடைபெறும் வீதி ஊர்வலமாகும். “சிங்கே” என்ற பெயர், *ஜுவாங் யீ* (ஆடையணி வேடதாரக் கலை) எனும் ஹாக்கியன் சொல்லிலிருந்து தோன்றியது. இந்த வழக்கம் 19ஆம் நூற்றாண்டின்போது பினாங்கில் இருந்த சீனக் குடியேறிகளிலிருந்து தொடங்கியதாக நம்பப்படுகிறது. 1840கள் முதல் 1900கள் வரை, சிங்கே ஊர்வலம் மாபெரும் கோலாகலமான ஊர்வலங்களாக நடந்தேறின. சீனக் குலமரபு அமைப்புகளும் சங்கங்களும் சீன தெய்வங்களைப் போற்றி ஊர்வலங்களை நடத்தின.

இன்று, சிங்கப்பூரின் நவீன சிங்கே ஊர்வலம், பல இனங்களையும் நாடுகளையும் சேர்ந்த படைப்பாளர்களுடன் பல கலாசார நிகழ்ச்சியாக உருமாறியுள்ளது. ஆர்ச்சர்ட் சாலை, ஃபார்முலா ஒன் மரினா பே கார் பந்தயப் பாதை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சிங்கே ஊர்வலம் நடந்தேறியுள்ளது.

1. நீங்கள் இதற்குமுன் சிங்கே ஊர்வலத்தைப் பார்த்திருக்கிறீர்களா அல்லது பங்கெடுத்திருக்கிறீர்களா?
2. வீதி ஊர்வலங்களில் உங்களுக்கு மிகவும் பிடித்தது என்ன?
3. இந்நிகழ்ச்சிகளின் கொண்டாட்டச் சூழல் உங்களுக்குப் பிடிக்குமா?

சிங்கே ஊர்வலம் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள் – e-NLB மின்சேவையில்
https://go.gov.sg/nhbcsk4-chingayparade

# சீனப் புத்தாண்டின் குடும்ப ஒன்றுகூடல், 1990கள்



**வூ சீஜிங் வழங்கிய அன்பளிப்பு. தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1052142

# சீனப் புத்தாண்டின் குடும்ப ஒன்றுகூடல், 1990கள்


## பின்னணி:

1990களின் சீனப் புத்தாண்டு குடும்ப ஒன்றுகூடல். புத்தாண்டில் குடும்பம் ஒற்றுமையாக இருக்கவும், அதிர்ஷ்டம் கிட்டவும் சீனப் புத்தாண்டு கொண்டாடப்படுகிறது. இந்தக் கொண்டாட்டம் 15 நாட்களுக்கு நீடிக்கும். குடும்பத்தினரும் நண்பர்களும் ஒருவருக்கொருவர் பணம் அல்லது உணவுப் பொருட்களை அன்பளிப்பாகப் பரிமாறிக் கொண்டு, ஒருவர் மற்றவரது வீடுகளுக்கு வருகையளிப்பார்கள்.

சீனப் புத்தாண்டு கொண்டாட்டம் எவ்வாறு தொடங்கியது என்பதற்கு *நியன்* ("ஆண்டு" என்று அர்த்தம்) எனும் இராட்சத மிருகம் பற்றிய இதிகாசக் கதை ஒன்று உண்டு. இந்த இராட்சத மிருகம், சீனப் புத்தாண்டின் முன்தினம் கிராமவாசிகளையும் கால்நடைகளையும் தாக்குவது வழக்கம். மெழுகுவர்த்திகளை ஏற்றிவைத்து, பட்டாசுகளை வெடித்து, பளிச்சிடும் சிவப்பு நிற ஆடைகளை அணிந்தால் மிருகத்தை விரட்டிவிடலாம் என கிராமவாசிகளுக்குத் தெரியவந்தது. அன்றிலிருந்து, சிவப்பு நிறம் புத்தாண்டில் அதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும் மங்களகரமான நிறம் என்ற நம்பிக்கை நீடித்து வருகிறது.

வீடு முழுவதையும் சுத்தம் செய்வது, புத்தாடை அணிவது, புத்தாண்டின் முன்தினம் குடும்பத்தினர் ஒன்றுகூடி விருந்து உண்பது போன்றவை சீனப் புத்தாண்டின் மற்ற வழக்கங்களில் உள்ளடங்கும். அதிர்ஷ்டத்தையும் மகிழ்ச்சியையும் குறிக்கும் வண்ணம், பணம் நிரப்பப்பட்ட ஹொங் பாவ்களும் ("சிவப்பு உறைகள்" என்று அர்த்தம்) வழங்கப்படுகிறது. சிங்கப்பூரில், உள்ளூர் சீனக் குடும்பங்கள் யூ ஷெங் எனும் பாரம்பரியமான சீனப் புத்தாண்டு உணவை ஒன்றாகக் கலந்து லோ ஹெய் சொல்லும் வழக்கத்தையும் கடைப்பிடிக்கின்றனர். சிங்கப்பூரில் சீனப் புத்தாண்டு பொது விடுமுறை நாளாகும்.

1. இந்தப் புகைப்படத்திலுள்ள காட்சி எங்கு நடப்பதாக நினைக்கிறீர்கள்?
2. நீங்கள் இதற்குமுன் சிவப்பு உறைகள் கொடுத்திருக்கிறீர்களா அல்லது பெற்றிருக்கிறீர்களா?
3. உங்களுக்குப் பிடித்த சீனப் புத்தாண்டு உணவு அல்லது தின்பண்டம் என்ன?



சீனப் புத்தாண்டு பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-chinesenewyear

*லோ ஹெய், யூ* ஷெங் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-lohei

# தைப்பூசத்தில் காவடி தூக்கிச்செல்லும் ஆடவர், 1970கள் - 1980கள்



**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1191582

# தைப்பூசத் திருநாளில் காவடி தூக்கிச்செல்லும் ஆடவர், 1970கள் - 1980கள்

## பின்னணி:

1970கள் முதல் 1980கள் வரையிலான காலக்கட்டத்தில் தைப்பூசத் திருநாளில் காவடி தூக்கிச்செல்லும் இந்து சமய பக்தர். தமிழ் நாள்காட்டியின் தை மாதத்தில் மூன்று நாட்களுக்குத் தைப்பூசத் திருநாள் கொண்டாடப்படுகிறது. சிவபெருமானின் மகன் முருகப்பெருமானுக்கான திருநாளாக இந்து சமயத்தினர் தைப்பூசத்தைக் கொண்டாடுகின்றனர். சூரபத்மனை வீழ்த்திய முருகப்பெருமானின் வெற்றிக்குப் பரிசாக, தாயார் பார்வதி தன் மகனுக்கு சக்திவேலைக் கொடுத்து ஆசிர்வதித்த நாள் தைப்பூசத் திருநாள்.

ஒவ்வோர் ஆண்டும் தைப்பூசத்தில் பங்கெடுக்கும் பக்தர்களும் அவர்களது குடும்பத்தினரும் அதற்கென சிறப்பு ஆயத்தங்களைச் செய்யவேண்டும். காவடியும் பால்குடமும் தூக்குவதற்கும் அலகு குத்துவதற்கும் பக்தர்கள் விரதமிருந்து தங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். காவடி தூக்கிச் செல்வோருக்கு உறுதுணையாகக் குடும்பத்தினர் உணவும் பானமும் ஊக்கமும் கொடுப்பார்கள்.


சிங்கப்பூரில், சிராங்கூன் சாலையில் உள்ள ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருநாள் கோயிலிலிருந்து டேங்க் சாலையில் உள்ள ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயில் வரை பக்தர்களும் காவடி தூக்குவோரும் வெறுங்காலில் நடந்து செல்வது வழக்கம். இதற்காகவே, ஒவ்வொரு ஆண்டும் சாலைகள் மூடப்படுகின்றன. இந்து அல்லாத மற்ற சிங்கப்பூரர்களும் சுற்றுப்பயணிகளும் தைப்பூச ஊர்வலத்தைக் காண வழி நெடுகிலும் திரண்டு, திருநாளில் கலந்துகொள்வதைக் காணலாம்.

1. இந்த ஆடவர் எதைத் தூக்கிச் செல்கிறார்?
2. நீங்கள் இதற்குமுன் தைப்பூசத் திருநாளில் பங்கெடுத்திருக்கிறீர்களா?
3. நீங்கள் இதற்குமுன் இந்து கோயிலுக்குச் சென்றிருக்கிறீர்களா?

காவடி புகைப்படம்
https://go.gov.sg/nhbcsk4-kavadi

தைப்பூசம் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-thaipusam

# குவான் யின்னின் பிறந்தநாளன்று ஆலயத்தில் வழிபடும் பக்தர்கள், 1980கள்



**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1188842

# குவான் யின்னின் பிறந்தநாளன்று ஆலயத்தில் வழிபடும் பக்தர்கள், 1980கள்

## பின்னணி:

1980களில் குவான் யின்னின் பிறந்தநாளன்று ஆலயத்தில் வழிபடும் பக்தர்களின் படம் இது. கருணையின் வடிவான போதிசத்வர் அல்லது கருணை தெய்வம் என்றும் அறியப்படும் குவான் யின்னின் பிறந்தநாள், சீன நாள்காட்டியின் இரண்டாம் மாதத்தின் 19ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

குவான் யின் என்ற பெயருக்கு "உலகின் ஓசைகளை அல்லது அழுகுரல்களைக் கவனிப்பவர்" என்று அர்த்தம். இந்தப் பெண் தெய்வம் அளவில்லா கருணையுடன் தேவைப்படுவோருக்கு உதவி செய்வார் என்பது பக்தர்களின் நம்பிக்கை. குவான் யின்யின் சில சிலைகளில் ஒரு குழந்தையும் உடனிருக்கும். இந்த வடிவில் அவர் "சொங் ஜி குவான் யின்" ("குழந்தைகளை அருளுபவர்" என்று அர்த்தம்) என்றழைக்கப்படுகிறார். கருத்தரிக்க அருளும் சக்திக்காக, குவான் யின்னின் இந்த வடிவத்தைப் பக்தர்கள் வழிபடுகின்றனர்.

சிங்கப்பூரில், குவான் இம் தொங் ஹூட் சோ ஆலயத்தில் நடைபெறும் மாபெரும் விழாக்களில் ஒன்றாக குவான் யின்னின் பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது. வாட்டர்லூ ஸ்திரீட்டில் அமைந்திருக்கும் இந்த ஆலயம், சிமாலு குவான் யின் ஆலயம் என்றும் அழைக்கப்படுகிறது. குவான் யின்னுக்காக 1884ல் கட்டப்பட்ட இந்த ஆலயம், சிங்கப்பூரிலுள்ள ஆகப் பழமையான பௌத்த ஆலயங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. குவான் யின்னின் பிறந்தநாளன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்திற்குச் சென்று, பாதுகாப்பும் ஆரோக்கியமும் அருளுமாறு வேண்டி ஊதுவத்திகளை ஏற்றி காணிக்கைகள் செலுத்துவார்கள்.

1. பெண் தெய்வம் குவான் யின் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?
2. சீன ஆலயத்தில் பக்தர்கள் எப்படி வழிபடுவார்கள்?
3. நீங்கள் ஏதேனும் சமய நம்பிக்கைகளை அல்லது வழக்கங்களைக் கடைப்பிடிக்கிறீர்களா?

குவான் யின் ஒரு குழந்தையுடன் காட்சியளிக்கும் செராமிக் சிலையின் புகைப்படம்
https://go.gov.sg/nhbcsk4-guanyinwithchild

குவான் யின்னின் பிறந்தநாள் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள் – e-NLB மின்சேவையில்
https://go.gov.sg/nhbcsk4-kwanimthonghoodcho

# ஈஸ்தர் ஆராதனையின்போது திருப்பாடல்கள் பாடும் பாடற்குழுவினர், 2008



**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

https://www.roots.gov.sg/ich-landing/ich/easter

# ஈஸ்தர் ஆராதனையின்போது திருப்பாடல்கள் பாடும் பாடற்குழுவினர், 2008

## பின்னணி:

2008ல் செயின்ட் ஆன்ட்ரூஸ் தேவாலயத்தில் நடைபெற்ற ஈஸ்தர் ஆராதனையில் திருப்பாடல்கள் பாடும் பாடற்குழுவினர். உலகெங்கிலும் வாழும் கிறிஸ்துவர்கள் ஈஸ்தர் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். ஏசுநாதர் உயிர்ப்பித்தெழுந்ததை இந்தப் பண்டிகை கொண்டாடுகிறது. பெரும்பாலான கிறிஸ்துவர்கள் ஈஸ்தர் நாளுக்கு முன்பாக “லென்ட்” எனும் 40 நாள் வழிபாட்டையும் விரதத்தையும் கடைப்பிடிப்பார்கள். ஈஸ்தருக்கு முந்திய வாரம், நினைவலைகளின் எண்ணப் பிரதிபலிப்புக்கு உரிய காலமாகப் பயன்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஈஸ்தர் அல்லது புனித வெள்ளிக்கு முந்திய வெள்ளிக்கிழமையன்று, கிறிஸ்துவர்கள் ஒன்றுகூடி ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீத்ததை நினைவுகூர்வார்கள்.

ஈஸ்தர் அல்லது கொண்டாட்ட நாளன்று, எல்லா பிரிவுகளைச் சேர்ந்த கிறிஸ்துவர்களும் தேவாலயத்தில் சிறப்பு ஆராதனையில் கலந்து கொள்வார்கள். மகிழ்ச்சியையும் தூய உள்ளத்தையும் குறிக்கும் சின்னங்களாகக் கண்ணைக் கவரும் மலர் அலங்காரங்கள், தங்க, வெள்ளி நிறத்தில் பீடத்தை அலங்கரிக்கும் துகில்கள், அலங்கரிப்புகள் போன்றவை பயன்படுத்தப்படும்.

சிங்கப்பூரில், பெரும்பாலான கிறிஸ்துவர்கள் ஞாயிற்றுக்கிழமையன்று தத்தம் தேவாலயங்களில் ஈஸ்தர் ஆராதனைக்காக ஒன்றுகூடுவார்கள். ஆராதனையைப் பாதிரியார் அல்லது தேவாலயத் தலைவர் வழிநடத்துவது வழக்கம். திருச்சபையினரில் சிலருக்கு பைபிளை வாசிப்பது, வழிபாட்டை வழிநடத்துவது, பாடற்குழுவில் பாடுவது போன்ற பொறுப்புகள் வழங்கப்பட்டிருக்கும். சிங்கப்பூரில் புனித வெள்ளி பொது விடுமுறை நாளாகும்.

1. நீங்கள் இதற்குமுன் தேவாலயத்திற்குச் சென்றிருக்கிறீர்களா?
2. ஈஸ்தர் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?
3. உங்களுக்கு மிகவும் பிடித்த பொது விடுமுறை நாள் எது?

ஈஸ்தர் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-easter

# சிங் மிங் திருவிழாவின்போது கல்லறையை சுத்தம் செய்கின்றனர், 2008




தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி

https://www.roots.gov.sg/ich-landing/ich/qing-ming-festival

# சிங் மிங் திருவிழாவின்போது கல்லறையை சுத்தம் செய்கின்றனர், 2008

## பின்னணி:

2008ன் சிங் மிங் திருவிழாவின்போது சிலர் ஒன்றுகூடி சீனக் கல்லறையை சுத்தம் செய்து காணிக்கைகளைப் படைக்கின்றனர்.

சிங் மிங் ஜியே என்றும் அறியப்படும் இந்தப் பாரம்பரிய சீனத் திருவிழா, சீன நாள்காட்டியின் மூன்றாம் மாதத்தில் நடைபெறும். சீன சமூகத்தினர் இவ்விழாவைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர்.

சிங் மிங் என்ற பெயருக்கு "தெளிவு", "வெளிச்சம்" என்று அர்த்தம். வசந்த காலத்தின் வரவை இது குறிக்கிறது. இவ்விழாவின்போது, சீனக் குடும்பங்கள் தங்களது கடமையுணர்வை வெளிக்காட்டும் வகையில் காலமான குடும்ப உறுப்பினர்களின் கல்லறைகளுக்கும் அஸ்தி மாடக்குழிகளுக்கும் வருகை அளிப்பார்கள். "சாவ் மூ" ("கல்லறைகளைப் பெருக்குதல்" என்று அர்த்தம்) என்ற வழக்கத்தின்படி கல்லறைகளை அல்லது அஸ்திக்கலம் வைக்கப்பட்டிருக்கும் மாடக்குழியைச் சுத்தம் செய்வார்கள். இறந்தவர்களுக்கு விருப்பமான உணவையும் இதர காணிக்கைகளையும் குடும்பத்தினர் எடுத்துச் செல்வார்கள்.

சிங்கப்பூரில், பெரும்பாலான முன்னோர் வழிபாடுகள் சாம்பல் காப்பகத்திலும் ஆலயங்களிலும் நடைபெறுகின்றன. இடுகாடுகளுக்கு வருகையளிக்கும் வழக்கம் காலப்போக்கில் குறைந்துவிட்டது. நிலப் பற்றாக்குறையும், கடலில் அஸ்தியைக் கரைத்தல் போன்ற மாற்று இறுதிச்சடங்குகளை நாடும் வழக்கமும் இதற்கான முக்கிய காரணங்களாகும்.

1. இந்நிகழ்வு எங்கு நடந்ததாக நினைக்கிறீர்கள்?
2. இந்த விழா எதற்கானது என்று நினைக்கிறீர்கள்?
3. "சாவ் மூ" என்ற சொல்லைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

சிங் மிங் திருவிழா பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-qingmingfestival

புக்கிட் ப்ரௌன் இடுகாட்டின் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் பாருங்கள்
https://go.gov.sg/nhbcsk4-bukitbrowncemetery

# விசாக தினத்தன்று புத்தர் சிலைமீது நீர் ஊற்றும் பக்தர்கள், 2008




**தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி**

https://www.roots.gov.sg/ich-landing/ich/vesak-day

# விசாக தினத்தன்று புத்தர் சிலைமீது நீர் ஊற்றும் பக்தர்கள், 2008

## பின்னணி:

2008ஆம் ஆண்டின் விசாக தினத்தன்று பக்தர்கள் புத்தர் சிலைமீது நீர் ஊற்றுகின்றனர். புத்தரின் பிறந்தநாளான விசாக தினம், சீன நாள்காட்டியின் வைசாக மாதத்தின் முதல் பௌர்ணமி நாளில் சமய நிகழ்வாகக் கொண்டாடப்படுகிறது.

கௌதம புத்தரின் பிறப்பு, ஞானம், மறைவு ஆகியவற்றை விசாக தினம் குறிக்கிறது. பக்தர்கள் இந்நாளில் ஆலயங்களில் ஒன்றுகூடி வழிபாட்டுச் சடங்குகளில் கலந்து கொள்வார்கள். ஒவ்வோர் ஆலயத்திற்கும் அதற்குரிய சிறப்பு சடங்கு அல்லது பாரம்பரியம் உண்டு.

இதிகாசக் கடல்நாகங்களை புத்தர் புனிதமாக்கியதை நினைவுகூரும் வகையில், புத்தர் சிலைமீது நீரூற்றி குளிப்பாட்டுவது பரவலான ஒரு வழக்கம். சைவ உணவு சாப்பிடுவது, அகல் விளக்குகள் ஏற்றுவது, அறப்பணி செய்வது போன்றவை மற்ற வழக்கங்களில் உள்ளடங்கும். சில ஆலயங்கள் துறவிகளின் சமய உரைகளுக்கும் ஏற்பாடு செய்வதுண்டு.

சிங்கப்பூரில், விசாக தினக் கொண்டாட்டத்தில் பௌத்தர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பௌத்தர்களுக்கு இடையில் கலாசாரப் பரிமாற்றத்திற்கு வாய்ப்பளித்து, பௌத்த சமயம் பற்றிய முழுமையான புரிந்துணர்வுக்கு வழிகோலுகிறது. விசாக தினம் சிங்கப்பூரில் பொது விடுமுறை நாளாகும்.

1. இவர்கள் என்ன செய்வதாக நினைக்கிறீர்கள்?
2. நீங்கள் இதற்குமுன் புத்தர் ஆலயத்திற்குச் சென்றதுண்டா?
3. சிங்கப்பூரில் உங்களுக்கு மிகவும் பிடித்த வழிபாட்டுத் தலங்கள் என்ன?

விசாக தினம் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-vesakday

# நோன்புப் பெருநாளில் ஒருவருக்கொருவர் வாழ்த்து கூறுகின்றனர், 1962



தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1097272

# நோன்புப் பெருநாளில் ஒருவருக்கொருவர் வாழ்த்து கூறுகின்றனர், 1962

## பின்னணி:

1962ல் நடைபெற்ற நோன்புப் பெருநாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக மக்கள் ஒருவருக்கொருவர் வாழ்த்து கூறுகின்றனர்.

ஈதுல்ஃபித்ரி என்றும் அறியப்படும் நோன்புப் பெருநாள், இஸ்லாமிய நோன்பு மாதமான ரமலானின் நிறைவைக் குறிக்கும் வகையில் ஷவ்வால் மாதத்தின் முதல் நாளன்று கொண்டாடப்படுகிறது. ஒருவர் தனது ஆசைகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு வெற்றி காண்பதைப் பாராட்டி இந்நாள் கொண்டாடப்படுகிறது.

நோன்புப் பெருநாளின் முக்கியமான ஒரு பாரம்பரியம் உறவினர்களிடமும் நண்பர்களிடமும் மன்னிப்பு கேட்டு, பந்தத்தை வலுப்படுத்திக் கொள்வதாகும். முஸ்லிம்கள் தங்களது வீடுகளை அலங்கரித்து, புத்தாடை அணிந்து, *குவே* (இனிப்புப் பலகாரங்கள்), *கெத்துபாட்* (தென்னை ஓலையில் மடிக்கப்பட்ட அரிசிப் புட்டு) *ரெண்டாங்* (காரமான வதக்கல்) போன்ற மலாய் உணவு வகைகளை விருந்தினர்களுக்காகத் தயாரிப்பார்கள். சிறுவர்களுக்கு சிறிய பச்சை நிற உறைகளில் பண அன்பளிப்புகளும் கிடைக்கலாம்.

சிங்கப்பூரில், நோன்புப் பெருநாளின் மிகப்பெரிய சிறப்பம்சங்களில் ஒன்றாக கேலாங் செராய் வட்டாரத்தில் ஒளியூட்டு நடைபெறும். பல மைல் நீளத்திற்கு வண்ண விளக்குகள் ஒளிவீடும். ரமலான் விழாக்காலச் சந்தையில் பலவகையான உணவும் பாரம்பரிய பாஜு குரோங் ஆடையும் விற்பனை செய்யும் ஏகப்பட்ட கடைகள் இருக்கும். நோன்புப் பெருநாள் சிங்கப்பூரில் பொது விடுமுறை நாளாகும்.

1. இவர்கள் என்ன செய்வதாக நினைக்கிறீர்கள்?
2. நீங்கள் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுவீர்களா?
3. உங்களுக்கு எந்த விழாக்களை அல்லது நிகழ்வுகளைக் கொண்டாடப் பிடிக்கும்?

நோன்புப் பெருநாள் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-harirayapuasa

கெத்துபாட் பின்னும் வழக்கம் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-ketupat

# தீமிதித் திருவிழாவின் தீயில் இறங்கும் சடங்கு, 2018



சிங்கப்பூர் இந்து அறக்கட்டளை வாரியத்திற்கு நன்றி
https://www.roots.gov.sg/ich-landing/ich/theemithi

# தீமிதித் திருவிழாவின் தீயில் இறங்கும் சடங்கு, 2018

## பின்னணி:

2018ன் தீமிதித் திருவிழாவின் தீயில் இறங்கும் சடங்கு. இந்து சமயத்தவரின் தீமிதித் திருவிழா, ஆடி மாத அமாவாசை அன்று தொடங்குகிறது. மூன்று மாதங்களாகத் தொடர்ந்து நடைபெறும் சடங்குகளுக்குப் பிறகு, அக்டோபர் மாதத்தில் தீயில் இறங்கும் சடங்குடன் திருவிழா நிறைவடையும்.

இந்திய இதிகாசமான மகாபாரதத்தை அடிப்படையாகக் கொண்ட தீமிதித் திருவிழா, மகாபாரதக் கதையின் நாயகி திரௌபதி தனது புனிதத்தை நிரூபிப்பதற்காக வெறுங்காலில் தீயில் நடந்து காயமில்லாமல் வெளியே வந்த சம்பவத்தைக் கௌரவிக்கிறது. அதேபோல, இந்து சமயக் கோட்பாடுகளுக்கு இணங்கி வாழ்ந்தால், எரியும் நிலக்கரி பாதங்களைச் சுட்டெரிக்காது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பக்தர்கள் தீயில் இறங்குகின்றனர்.


சிங்கப்பூரில், தீயில் இறங்கும் சடங்கில் ஆண்கள் மட்டுமே பங்குபெறலாம். பெரும்பாலும் தென்னிந்தியர்களே இச்சடங்கில் பங்கேற்பார்கள். ஸ்ரீ மாரியம்மன் கோயிலில் ஆண்டுக்கு ஒரு முறை இச்சடங்கு நடைபெறுகிறது. தொண்டூழியர்கள் ஒரு பெரிய தீக்குழியை வெட்டி, அதில் அனல்பறக்கும் மரக்கட்டைகளை அல்லது நிலக்கரியை நிரப்புவார்கள். கோயில் பண்டாரம் தீயில் இறங்கி சடங்கைத் தொடங்கி வைப்பார். அதன்பின்னர் பக்தர்கள் ஒருவர்பின் ஒருவராகத் தீயில் இறங்குவார்கள். தீக்குழியின் முடிவில் ஒரு சிறிய குழியில் பால் நிரப்பப்பட்டிருக்கும். தீயில் இறங்கிய பக்தர்கள் பாலில் தங்களது பாதங்களை நனைப்பார்கள்.

1. இந்த ஆடவர்கள் என்ன செய்வதாக நினைக்கிறீர்கள்?
2. தீயில் நடப்பது எப்படி இருக்கும் என நினைக்கிறீர்கள்?
3. நீங்கள் இதற்குமுன் இந்து கோயிலுக்குச் சென்றிருக்கிறீர்களா?

தீமிதி பற்றி மேலும் படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-theemithi

ஸ்ரீ மாரியம்மன் கோயில் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-srimariammantemple

# கடல்நாகப் படகுத் திருவிழாவின்போது எஸ்ப்லனேட் நீர்முகப்பில் நடைபெற்ற கடல்நாகப் படகுப் போட்டி, 1978



**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1194047

# கடல்நாகப் படகுத் திருவிழாவின்போது எஸ்ப்லனேட் நீர்முகப்பில் நடைபெற்ற கடல்நாகப் படகுப் போட்டி, 1978


## பின்னணி:

கடல்நாகப் படகுத் திருவிழாவின் ஒரு பகுதியாக, 1978ல் எஸ்ப்லனேட் நீர்முகப்பில் நடந்தேறிய கடல்நாகப் படகுப் போட்டி. டுவான் வூ ஜியே அல்லது டம்ப்ளிங் திருவிழா என்றும் அழைக்கப்படும் சீனர்களின் இந்தத் திருவிழா, ஒவ்வோர் ஆண்டும் ஐந்தாவது சீன மாதத்தின் ஐந்தாம் நாளில் கொண்டாடப்படுகிறது. சீன இதிகாசத்தின் ஆற்றுக் கடல்நாகத்தை வழிபடவும், சீன அதிகாரி சூ யுவானை நினைவில் கொள்ளவும் இவ்விழா நடைபெறுகிறது.

சீன நாட்டுப்புறக் கதைகளின்படி, ஊழலில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எதிராகக் குரல்கொடுத்த சூ யுவான் அரசவையிலிருந்து நிரந்தரமாக வெளியேற்றப்பட்டார். அவர் ஆற்றில் குதித்து உயிரைவிடத் தீர்மானித்தார். அங்கிருந்த மீனவர்களால் அவரைக் காப்பாற்ற இயலாதபோது, அவரது உடலை மீன்கள் கொத்தித் தின்பதைத் தடுக்க மூங்கில் தண்டுகளில் அரிசியை நிரப்பி தூவியதாகச் சொல்லப்படுகிறது. இன்னொரு கதையின்படி, மீனவர்கள் சூ யுவானைக் காப்பாற்ற கடல்நாகப் படகுகளில் சென்றதாகச் சொல்லப்படுகிறது. அதனால், மீனவர்களின் முயற்சியை சடங்குபூர்வமாகப் பிரதிநிதிக்கும் வகையில் கடல்நாகப் படகுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

சிங்கப்பூரில், இவ்விழாவின்போது கவுனி அரிசி டம்ப்ளிங்ஸ் சாப்பிடுவதும் கடல்நாகப் படகுப் போட்டி நடத்துவதும் வழக்கம். படகுத் திரளணி பாணியிலான முதல் கடல்நாகப் படகுப் போட்டிக்கு சிங்கப்பூர் பயணத்துறை கழகம் 1978ல் ஏற்பாடு செய்தது.

1. இந்த ஆடவர்கள் என்ன செய்வதாக நினைக்கிறீர்கள்?
2. டம்ப்ளிங் திருவிழாவில் உங்களுக்கு மிகவும் பிடித்தது என்ன?
3. உங்களுக்கு ஜொங்ஜியின் (சீனக் கவுனி அரிசி டம்ப்ளிங்) சுவை பிடிக்குமா?



கடல்நாகப் படகுத் திருவிழா பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-dragonboatfestival

# தேசிய நாள் அணிவகுப்பில் அணிவகுத்துச் செல்லும் சீருடை அணியினர், 1982



**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1211699

# தேசிய நாள் அணிவகுப்பில் அணிவகுத்துச் செல்லும் சீருடை அணியினர், 1982

## பின்னணி:

1982ல் தேசிய நாள் அணிவகுப்பில் அணிவகுத்துச் செல்லும் சீருடை அணியினர்.

ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 9ஆம் தேதி தேசிய நாள் கொண்டாடப்படுகிறது. சிங்கப்பூர் சுதந்திரம் அடைந்ததை நினைவுகூரும் இந்நாளில், அனைத்து பின்னணிகளைச் சேர்ந்த சிங்கப்பூரர்களும் நாட்டின் முன்னேற்றங்களையும் சாதனைகளையும் கொண்டாடுகிறார்கள்.

சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து தனி நாடாகப் பிரிந்து ஓராண்டுக்குப் பிறகு, 1966ல் முதல் தேசிய நாள் அணிவகுப்பு பாடாங்கில் நடைபெற்றது. பின்னர் 1974ல் முதல்முறையாக தேசியத் தொலைக்காட்சியில், வண்ணத்தில் தேசிய நாள் அணிவகுப்பு “நேரடியாக” ஒளிபரப்பானது. தேசிய நாள் பாடல்கள் 1980களில் அறிமுகம் கண்டன. “ஸ்டாண்ட் அப் ஃபோர் சிங்கப்பூர்” (1984), “ஹோம்” (1998) போன்ற விறுவிறுப்பான பாடல்கள் மக்களிடையில் பெரும் வரவேற்பைப் பெற்றன.

பாரம்பரியமாகப் பறந்துவரும் தேசியக் கொடி, சிவப்பு சிங்கங்களின் வான்குடை சாகசக் காட்சி, ராணுவ, சீருடை அணியினரின் அணிவகுப்பு, வாணவேடிக்கை ஆகியன வருடாந்தர தேசிய நாள் கொண்டாட்டத்தின் முக்கிய அம்சங்களாகத் திகழ்கின்றன. தேசிய நாள் சிங்கப்பூரில் பொது விடுமுறை நாளாகும்.

1. இந்தப் பெண்கள் கையில் எதைப் பிடித்திருக்கிறார்கள்?
2. நீங்கள் இதற்குமுன் தேசிய நாள் அணிவகுப்புக்குச் சென்றிருக்கிறீர்களா?
3. தேசிய நாளை நீங்கள் எப்படி கொண்டாடுவீர்கள்?

தேசிய நாள் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-nationalday

தேசிய நாள் அணிவகுப்பின் வரலாற்றைப் படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-ndp50years

# பசிப் பேய் திருவிழாவின்போது ஏற்றப்பட்ட ஊதுவத்திகளும் வழங்கப்பட்ட காணிக்கைகளும், 2018




**தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி**

https://www.roots.gov.sg/ich-landing/ich/zhong-yuan-jie-hungry-ghost-festival

# பசிப் பேய் திருவிழாவின்போது ஏற்றப்பட்ட ஊதுவத்திகளும் வழங்கப்பட்ட காணிக்கைகளும், 2018

## பின்னணி:

2018ஆம் ஆண்டின் பசிப் பேய் திருவிழாவின்போது ஊதுவத்திகளும் காணிக்கைகளும் எரிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். ஜொங் யுவான் ஜியே என்றும் அழைக்கப்படும் இவ்விழா, சீன நாள்காட்டியின் ஏழாம் மாதத்தில் நடைபெறுகிறது. ஏழாம் மாதத்தில் நரக வாசல் திறக்கும் என நம்பும் சீனர்களும், பௌத்தர்களும் டாவிசர்களும் இவ்விழாவை அனுசரிக்கின்றனர். நரகத்தில் உள்ள ஆத்மாக்களுக்குக் காணிக்கைகள் செலுத்த சந்ததியினர் இல்லாததால், அந்த ஆத்மாக்கள் "பசியோடு" வெளியே வரும் என்ற நம்பிக்கையால் இவ்விழாவுக்கு இந்தப் பெயர் வந்தது.

அதனால், இவ்விழாவின் பெரும்பாலான வழக்கங்கள் ஆத்மாக்களை உபசரித்து திருப்தி படுத்துவதன் தொடர்பிலானவை. வீடு, கார், கைப்பேசி போன்ற காகித வடிவுருக்கள், காகிதப் பணம் ஆகியவற்றை எரிப்பதும் உணவு காணிக்கைகள் செலுத்துவதும் இதில் உள்ளடங்கும். ஆத்மாக்கள், உயிருள்ள மனிதர்கள் இருவருக்குமான பொழுதுபோக்காக, கெத்தாய் ("பாடல் மேடை" என்று அர்த்தம்) கலைநிகழ்ச்சிகளும் படைக்கப்படுகின்றன.

சிங்கப்பூரில், வீடுகளில் அல்லது ஆலயங்களில் காணிக்கைகள் வழங்குவது வழக்கம். அதோடு, பூமியில் அலைந்து திரியும் ஆத்மாக்களுக்காக சாலை ஓரங்களிலும் பொது குடியிருப்புப் பேட்டைகளின் காலித் திடல்களிலும் காணிக்கைகள் படைக்கப்படும். பசிப் பேய்களுக்காக நடத்தப்படும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் பாரம்பரிய சீனத் தெருக்கூத்து, பாவைக்கூத்து போன்றவற்றிலிருந்து நவீன கெத்தாய் மேடை கலைநிகழ்ச்சிகளாக இன்று மாறிவிட்டன.

1. பசிப் பேய் திருவிழா பற்றி நீங்கள் இதற்குமுன் கேள்விப்பட்டதுண்டா?
2. நீங்கள் இதற்குமுன் கெத்தாய் கலைநிகழ்ச்சியைப் பார்த்ததுண்டா?
3. உங்களுக்கு வேறு என்ன வகையான கலைநிகழ்ச்சிகளைப் பார்க்கப் பிடிக்கும்?

பசிப் பேய் திருவிழா பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-hungryghostfestival

கெத்தாய் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-getai

# இலையுதிர்க்காலத் திருவிழாவின்போது ஒளிக்கூண்டுகளுடன் விளையாடும் சிறுவர்கள், 1980கள்




**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1193754

# இலையுதிர்க்காலத் திருவிழாவின்போது ஒளிக்கூண்டுகளுடன் விளையாடும் சிறுவர்கள், 1980கள்

## பின்னணி:

1980களின் இலையுதிர்க்காலத் திருவிழாவின்போது இரு சிறுவர்கள் ஒளிக்கூண்டுகளுடன் விளையாடுகின்றனர். ஜொங் சியூ ஜியே அல்லது ஒளிக்கூண்டு அல்லது மூன்கேக் திருவிழா என்றும் அழைக்கப்படும் சீனர்களின் இத்திருவிழா, சீன நாள்காட்டியின் எட்டாம் மாதத்தில் பதினைந்தாம் நாள் கொண்டாடப்படுகிறது. அன்று நிலா முழுநிறைவாக இருக்கும் என நம்பப்படுகிறது.

இந்தத் திருவிழா எப்படி தொடங்கியது என்பதற்குப் பற்பல சீன நாட்டுப்புறக் கதைகள் உள்ளன. அவற்றுள் பிரபலமான ஒன்று சாங் ஈ என்பவரின் கதை. சாங் ஈ-யின் கணவர் ஹாவ் யீ ஒரு வில்லாளர். அவரிடம் இறவா வரமளிக்கும் அமுதம் இருந்தது. சாங் ஈ அந்த அமுதத்தைப் பருகி நிலாவுக்குச் சென்றுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இதையறிந்த ஹாவ் யீ, வானத்தை நோக்கி சாங் ஈ-யின் பெயரைச் சொல்லி அழைத்தார். அப்போது, நிலாவில் தன் மனைவியின் உருவத்தை அவர் கண்டார். உடனே, தன் மனைவிக்குப் பிடித்த உணவு வகைகளைத் தயாரித்து, பீடத்தில் காணிக்கையாகப் படைத்தார். அன்றிலிருந்து, பல சீனக் குடும்பங்கள் சாங் ஈ-யை நிலா தெய்வமாகக் கருதி, அமைதியும் அதிர்ஷ்டமும் வேண்டி காணிக்கைகள் செய்து வருகின்றனர்.


சிங்கப்பூரில், குடும்பங்கள் ஒன்றுகூடி நிலாப் பணியாரம் (மூன்கேக்), கிச்சிலிப்பழம், தேநீர் சுவைத்துக்கொண்டே பந்தம் வளர்ப்பதற்கான ஒரு வாய்ப்பை இலையுதிர்க்காலத் திருவிழா வழங்குகிறது. பற்பல அமைப்புகளும் சமூக அளவிலான விழாக்களை வழிநடத்துகின்றன. மூத்தோர், சிறுவர்கள், பெரியவர்கள் என அனைவரும் ஒளிக்கூண்டுகளை ஏந்தியபடி, அக்கம்பக்கத்தில் மாலைநேர உலா செல்ல அழைக்கப்படுகின்றனர்.

1. இந்தச் சிறுவர்கள் கையில் பிடித்திருப்பது என்ன?
2. உங்களுக்கு எந்த வகையான ஒளிக்கூண்டுகள் மிகவும் பிடிக்கும்?
3. உங்களுக்கு நிலாப் பணியாரம் (மூன்கேக்) சாப்பிடப் பிடிக்குமா?

இலையுதிர்க்காலத் திருவிழா பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-midautumnfestival

1970களில் வீதியோரத்தில் நிலாப் பணியாரம் விற்பனை செய்த கடையின் புகைப்படம்
https://go.gov.sg/nhbcsk4-sellingmooncakes

# லிட்டில் இந்தியாவில் தீபாவளி ஒளியூட்டு, 1980கள்




**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1189146

# லிட்டில் இந்தியாவில் தீபாவளி ஒளியூட்டு, 1980கள்

## பின்னணி:

1980களில் லிட்டில் இந்தியாவை அலங்கரித்த தீபாவளி ஒளியூட்டின் இரவுநேரக் காட்சியைப் படத்தில் காணலாம். தீபத் திருநாள் என்றும் அழைக்கப்படும் இந்து சமயப் பண்டிகையான தீபாவளி, ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதத்திற்கும் நவம்பர் மாதத்திற்கும் இடையில், ஐப்பசி மாதத்தில் கொண்டாடப்படுகிறது. தீபாவளி பண்டிகை எப்படி தொடங்கியது என்பது பற்றி வட இந்தியர்களுக்கும் தென்னிந்தியர்களுக்கும் இடையில் மாறுபட்ட கதைகள் இருந்தாலும், இருளை அகற்றும் ஒளிபோல, தீமையை நல்லவை வெற்றி காண்பதன் கொண்டாட்டமாக தீபாவளி பொதுவாகக் கருதப்படுகிறது.

தீபாவளிக்கு சில வாரங்களுக்கு முன்பிருந்தே ஆயத்தப் பணிகள் தொடங்கிவிடும். வீட்டைச் சுத்தம் செய்து அலங்கரிப்பது, புத்தாடைகள் வாங்குவது, இனிப்பு, காரப் பலகாரங்கள் செய்வது போன்றவை அவற்றுள் அடங்கும். வீடுகளில் தீபங்களை ஏற்றி, கோலமும் வரைவார்கள். தீபாவளியன்று அதிகாலையில் எண்ணெய்த் தேய்த்து குளிப்பது மற்றொரு பாரம்பரியப் பழக்கமாகும்.


சிங்கப்பூரில், ஒவ்வோர் ஆண்டும் சிராங்கூன் சாலையை அலங்கரிக்கும் லிட்டில் இந்தியா ஒளியூட்டு, விழாக்காலக் கொண்டாட்டத்திற்குச் சிறப்பு சேர்க்கிறது. பாரம்பரிய புத்தாடைகள், அலங்காரங்கள், தின்பண்டங்கள் ஆகியவற்றை வாங்கி பண்டிகைக்குத் தயார்ப்படுத்த, பலரும் லிட்டில் இந்தியாவில் உள்ள கடைகளுக்கும் சந்தைகளுக்கும் திரண்டு செல்வார்கள். தீபாவளி பண்டிகை சிங்கப்பூரில் பொது விடுமுறை நாளாகும்.

1. இந்த விழா எதற்கானது என நினைக்கிறீர்கள்?
2. நீங்கள் இதற்குமுன் தீபாவளியின்போது லிட்டில் இந்தியாவுக்குச் சென்றிருக்கிறீர்களா?
3. உங்கள் குடும்பத்தாரும் நண்பர்களும் தீபாவளியை எப்படி கொண்டாடுவார்கள்?

தீபாவளி பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-deepavali

இந்தியரின் பாரம்பரிய ரங்கோலிக் கலை பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-rangoli

# குசு தீவுக்கு யாத்திரை, 1970கள்



**தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1164898

# குசு தீவுக்கு யாத்திரை, 1970கள்

## பின்னணி:

1970களில் குசு தீவுக்கு யாத்திரை சென்ற ஒரு குடும்பத்தினர், துவா பெக் கொங் ஆலயத்தை நோக்கி நடந்து செல்வதைப் படத்தில் காணலாம். சீன, மலாய் பக்தர்கள், அமைதியும், செழிப்பும், ஆரோக்கியமும் வேண்டி, ஒவ்வோர் ஆண்டும் சீன நாள்காட்டியின் ஒன்பதாம் மாதத்தில் ஆலயத்திற்கு யாத்திரை செல்வார்கள். பிறகு, ஆலயத்திற்குப் பின்னால் அமைந்துள்ள மூன்று கிராமாட்களிலும் (மலாய் சந்நிதிகள்) நல்லாசி பெற, குன்றின் 152 படிகளில் ஏறிச் செல்வார்கள்.


1923ல் கட்டப்பட்ட துவா பெக் கொங் ஆலயம், செழிப்பை அருளி, கடலோடிகளைப் பாதுகாக்கும் சீன தெய்வமான துவா பெ கொங்கைப் போற்றி வழிபடுகிறது. உள்ளூர் நாட்டுப்புறக் கதையின்படி, ஒரு பெரிய கடலாமை புயலில் சிக்கிய இரண்டு மலாய், சீன மீனவர்களைக் காப்பாற்றி கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தது. அதற்கு நன்றிக்கடனாக, மீனவர்கள் இத்தீவில் யாத்திரைக்கான சந்நிதிகளை அமைத்ததாகச் சொல்லப்படுகிறது.

ஒரு பெரிய கடலாமை கடலோடிகளைக் காப்பாற்றுவதற்காகத் தன்னை ஒரு தீவாக மாற்றிக் கொண்டதாகவும், அதனால்தான் குசு தீவு (“கடலாமை தீவு” என்று அர்த்தம்) என்ற பெயர் வந்ததாகவும் இன்னொரு கதை சொல்லப்படுகிறது.

1. இந்தப் புகைப்படம் எங்கே எடுக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியுமா?
2. நீங்கள் குசு தீவுக்குப் போனதுண்டா?
3. சிங்கப்பூரின் வேறெந்த தீவுகளுக்கு நீங்கள் போயிருக்கிறீர்கள்?

குசு தீவு யாத்திரை பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-kusuisland

# கிறிஸ்மஸ் பண்டிகையின்போது ஆர்ச்சர்ட் சாலையில் ஒளியூட்டு, 1980கள்




**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**
தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்
https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1193726

# கிறிஸ்மஸ் பண்டிகையின்போது ஆர்ச்சர்ட் சாலையில் ஒளியூட்டு, 1980கள்

## பின்னணி:

1980களில் ஆர்ச்சர்ட் சாலையில் ஒளிவீசிய கிறிஸ்மஸ் அலங்காரங்களின் இரவுநேரக் காட்சியைப் படத்தில் காணலாம். ஏசுநாதரின் பிறப்பைக் குறிக்கும் கிறிஸ்மஸ் பண்டிகை, ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 25ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.

கிறிஸ்துவர்கள் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்தினமும் கிறிஸ்மஸ் தினத்தன்றும் தேவாலய ஆராதனைகளில் கலந்துகொண்டு, பண்டிகையின் சமய அம்சங்களைக் கொண்டாடுவது வழக்கம். சில குடும்பங்கள் கிறிஸ்மஸ் மரம் போன்ற விழாக்கால அலங்காரங்களோடு வீடுகளை அலங்கரிப்பார்கள். கிறிஸ்மஸ் கொண்டாட்டக் காலம் 12 நாட்களுக்கு நீடிக்கும். அந்தக் காலகட்டத்தில், இல்ல வருகைகள், சமூக விருந்துகள், அன்பளிப்புகளின் பரிமாற்றங்கள் உள்ளிட்ட கிறிஸ்மஸ் விழாக்கால வழக்கங்கள் தொடரும்.

சிங்கப்பூரில், உள்ளூர் மக்களும் சுற்றுப்பயணிகளும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் ஆர்ச்சர்ட் சாலை கிறிஸ்மஸ் ஒளியூட்டு ஆயிரக்கணக்கான வருகையாளர்களைக் கவர்ந்திழுக்கிறது. ஒளியூட்டு தவிர, கடைத்தொகுதிகளும் தேவாலயங்களும் பாடல் குழுக்களை வரவழைத்து கிறிஸ்மஸ் மகிழ்ச்சிப்பாடல் நிகழ்ச்சிகளையும் நடத்துகின்றனர். கிறிஸ்மஸ் பண்டிகை சிங்கப்பூரில் பொது விடுமுறை நாளாகும்.

1. நீங்கள் ஆர்ச்சர்ட் சாலையில் கிறிஸ்மஸ் ஒளியூட்டைப் பார்த்ததுண்டா?
2. நீங்கள் கிறிஸ்மஸ் பண்டிகையை எப்படி கொண்டாடுவீர்கள்?
3. கிறிஸ்மஸ் பண்டிகையில் உங்களுக்கு மிகவும் பிடித்தது என்ன?

கிறிஸ்மஸ் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-christmas

# பிறந்தநாள் கொண்டாட்டங்கள் தொடர்பான பொருட்கள், 1960கள் முதல் 1980கள்






**திரு வோங் ஷியன் ஹோ வழங்கிய அன்பளிப்பு (இடது), திரு டான் சீ ஃபாங் வழங்கிய அன்பளிப்பு (வலது)**
**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம் எங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1373370
https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1106545

# பிறந்தநாள் கொண்டாட்டங்கள் தொடர்பான பொருட்கள், 1960கள் முதல் 1980கள்

## பின்னணி:

1982ன் சீனப் பிறந்தநாள் அழைப்பிதழும் (இடது), 1960கள் முதல் 1980கள் வரையிலான காலகட்டத்தில் ரெட் ஹவுஸ் பேக்கரி செய்த இதய வடிவிலான பிறந்தநாள் கேக்கும் (வலது). கேக்கின் மீது “பிரியமான பிராயனுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்” எனும் சொற்கள் எழுதப்பட்டுள்ளன. பிறந்தநாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக பேக்கரியிலிருந்து கேக் வாங்கப்பட்டிருக்கலாம்.

ஒருவரின் பிறந்தநாள், அவர் பிறந்த தேதியைக் குறிக்கிறது. பாரம்பரிய வழக்கங்கள், அவரவர் விருப்பங்களைப் பொறுத்து, ஒவ்வொருவரும் தங்களது பிறந்தநாளை வெவ்வேறு விதமாகக் கொண்டாடுவார்கள்.

எடுத்துக்காட்டாக, பாரம்பரியமான சீனக் குடும்பங்கள் சில, குடும்பத்திலுள்ள மூத்தவர்களின் சாதனைகளைக் கொண்டாடும் வகையில் பெரிய விருந்துகளுக்கு ஏற்பாடு செய்து, “ஷாவ்” (“நீண்ட ஆயுள்” என்று அர்த்தம்) எனும் சொல் கொண்ட அழைப்பிதழ்களை அனுப்பி வைப்பார்கள். நூடல்ஸ், பீச் பழ வடிவிலான “பன்” ரொட்டிகள் போன்ற உணவு வகைகளும் நீண்ட ஆயுளின் அடையாளச் சின்னங்களாகப் பரிமாறப்படும்.

1. இந்த அட்டை/கேக் யாருக்கானது என நினைக்கிறீர்கள்?
2. உங்கள் பிறந்தநாளை வழக்கமாக எப்படி கொண்டாடுவீர்கள்?
3. உங்களது அடுத்த பிறந்தநாளில் என்ன வரம் கேட்பீர்கள்?




பிறந்தநாள் விருந்தின்போது எடுக்கப்பட்ட குடும்பப் புகைப்படம்
https://go.gov.sg/nhbcsk4-birthdayfamilyportrait

# வழிபாட்டுச் சடங்கில் ஆசீர்வதிக்கப்படும் குழந்தை, 2018



தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி
https://www.roots.gov.sg/ich-landing/ich/birthing-traditions

# வழிபாட்டுச் சடங்கில் ஆசீர்வதிக்கப்படும் குழந்தை, 2018

## பின்னணி:

2018ல் நடைபெற்ற வழிபாட்டுச் சடங்கில் ஒரு குழந்தை ஆசீர்வதிக்கப்படுகிறது. இந்தியர்களின் இந்தச் சடங்கு (படத்தில் உள்ளபடி), குழந்தை பிறந்து 16வது நாளில் அல்லது 30வது நாளில் நடைபெறும். இதில் பெண்கள் மட்டுமே கலந்து கொள்வார்கள். குழந்தைகளைக் காக்கும் தெய்வம் என நம்பப்படும் ஸ்ரீ பெரியாச்சி அம்மனை வழிபட்டு, படையலுக்கு முன்னால் குழந்தையைத் தூக்கிப் பிடிப்பது சடங்கின் ஒரு பகுதியாகும். குழந்தையின் தாயை 40 முதல் 44 நாட்கள் வீட்டிலேயே வைத்திருந்து, இளஞ்சூடான மூலிகை நீரில் குளிக்க வைப்பது மற்ற வழக்கங்களில் உள்ளடங்கும்.

கர்ப்பகாலத்தில் பரிந்துரைக்கப்படும் உணவு வகைகளைச் சமைத்து உண்பது, குழந்தை பிறந்த பிறகு குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவது போன்ற பிள்ளைபேறு பாரம்பரியங்களில் சில தலைமுறை தலைமுறையாகக் கடைப்பிடிக்கப்பட்டாலும், எல்லாப் பாரம்பரியங்களும் இன்று கடைப்பிடிக்கப்படுவதில்லை. அவரவரின் சமூக நம்பிக்கைகள், குடும்பத்தினரிடையில் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றைப் பொறுத்தே பிள்ளைபேறு பாரம்பரியங்களும் வழிவழியாகத் தொடர்கின்றன.

சீன, இந்திய, மலாய் சமூகங்களுக்குத் தனித்தனி வழக்கங்கள் இருந்தாலும், பிரசவத்திற்கு முன்பும் பின்பும் தாய் ஆரோக்கியமாக இருக்க உதவும் நோக்கம் பொதுவானது.

1. இந்த நிகழ்வு எதற்கானது என நினைக்கிறீர்கள்?
2. அண்மையில் குழந்தை பெற்றெடுத்த தாய்மார் பின்பற்றவேண்டிய சில வழக்கங்கள் அல்லது பாரம்பரியங்கள் என்ன?
3. இதுபோன்ற வழக்கங்களை இன்றும் பின்பற்றும் தாய்மார்கள் யாரையேனும் உங்களுக்குத் தெரியுமா?

பிள்ளைபேறு பாரம்பரியங்கள் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-birthingtraditions

# சீன இறுதிச்சடங்கு ஊர்வலத்தில் பாடையுடன் துக்கம் அனுசரிப்போர், 1964




குமாரி ஈவ்லின் இங் வழங்கிய அன்பளிப்பு. தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1067773

# சீன இறுதிச்சடங்கு ஊர்வலத்தில் பாடையுடன் துக்கம் அனுசரிப்போர், 1964

## பின்னணி:

1964ல் நடந்த சீன இறுதிச்சடங்கு ஊர்வலத்தில் பாடையுடன் துக்கம் அனுசரிப்போரைப் படத்தில் காணலாம். பாரம்பரிய சீன இறுதிச்சடங்கின் கடைசி கட்டமாக, இறந்தவரின் வீட்டிலிருந்து இடுகாட்டுக்கு அல்லது தகனச்சாலைக்கு பாடையை எடுத்துச்செல்லும் ஊர்வலம் நடைபெறும். கடமை உணர்வையும் மரியாதையையும் வெளிக்காட்டும் வகையில், குடும்பத்தார் பாடைக்குத் துணையாகச் செல்வது வழக்கம். ஊர்வலத்தை வாத்திய இசைக்கலைஞர்கள் வழிநடத்துவார்கள். பாடையை நெருங்க முயலும் தீய ஆத்மாக்களை விரட்டுவது இசையின் நோக்கம்.

இறுதிச்சடங்கு பாரம்பரியங்கள் அந்தந்த சமூகத்தின் வழக்கங்களையும் சமூக வாழ்க்கையையும் பிரதிபலிக்கும். எடுத்துக்காட்டாக, சிங்கப்பூரிலுள்ள சீனர்கள் பலரும் தத்தம் கிளை மொழிப் பிரிவுகளின் பாரம்பரிய சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் தொடர்ந்து பின்பற்றுகின்றனர். இறுதிச்சடங்கு ஊர்வலத்திற்கு முன்பாக, மூன்று முதல் ஏழு நாட்களுக்கு, பொது குடியிருப்புப் பேட்டையின் கட்டடக் கீழ்த்தளத்தில் அல்லது இறந்தவரின் வீட்டில் கண்விழிப்பு நடைபெறும். கண்விழிப்பின்போது இறுதி மரியாதை செலுத்த உறவினர்களும் நண்பர்களும் அழைக்கப்படுவார்கள். இறுதிச்சடங்குக்கு வருகை தருவோர் “பாய் ஜின்” (“வெண் தங்கம்” என்று அர்த்தம்) எனும் சிறு தொகையை இறந்தவரின் குடும்பத்திற்குக் கொடுப்பது வழக்கம்.

1. இது என்ன நிகழ்வாக இருக்கும் என நினைக்கிறீர்கள்?
2. நீங்கள் இதற்குமுன் இறுதிச்சடங்குக்கு அல்லது கண்விழிப்புக்குச் சென்றிருக்கிறீர்களா?
3. இறுதிச்சடங்கில் கலந்துகொள்ளும்போது கடைப்பிடிக்க வேண்டிய சில பாரம்பரியங்கள் அல்லது வழக்கங்கள் என்ன?

சீன இறுதிச்சடங்குகள் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள் – e-NLB மின்சேவையில்
https://go.gov.sg/nhbcsk4-chinesedeathrituals

மலாய்-முஸ்லிம் இறுதிச்சடங்குகள் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள் – e-NLB மின்சேவையில்
https://go.gov.sg/nhbcsk4-malaymuslimfunerals

இந்து சமய முறைப்படியான இறுதிச்சடங்கு ஊர்வலத்தின் புகைப்படம்
https://go.gov.sg/nhbcsk4-hindufuneralprocession

# மேற்கத்திய திருமண ஆடையணிந்து மணம்புரிந்த சீனத் தம்பதியர், 1935




**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1081819

# மேற்கத்திய திருமண ஆடையணிந்து மணம்புரிந்த சீனத் தம்பதியர், 1935

## பின்னணி:

1935ல் மேற்கத்திய திருமண ஆடையணிந்து மணம்புரிந்த சீனத் தம்பதியர்.

மணப்பெண்ணும் மணமகனும் மேற்கத்திய திருமண ஆடை அணிந்திருக்கின்றனர். மணப்பெண் நீளமான வெண்ணிற ஆடையும் திருமண முகத்திரையும் அணிந்திருக்கிறார். மணமகன் சட்டையும் முழு ஆடையும் அணிந்திருக்கிறார். இருவருக்கும் தோழிகளாக சிறுமிகள் இருக்கின்றனர்.

பாரம்பரிய திருமணச் சடங்குகள் பரவலாக நடைபெற்ற போதிலும், சிங்கப்பூரில் இருந்த யுரேசியர்கள், சீனர்கள், இந்தியர்கள் பலரும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து மேற்கத்திய திருமணப் பழக்கங்களையும் ஆடையையும் பின்பற்றத் தொடங்கினர். கிறிஸ்துவ சமயத்திற்கு மாறுவதே ஆரம்பகால மாற்றத்திற்கு முக்கிய காரணமாக இருந்தது. மேற்கத்திய பாணி திருமணங்கள் தொடர்ந்து பிரபலமடைந்து வந்ததற்கு நவீனமய மோகம், மேற்கத்திய கல்வியின் தாக்கம், பல்லூடகம் போன்றவை காரணங்களாக இருந்திருக்கலாம்.

1. நீங்கள் இதற்குமுன் பாரம்பரிய அல்லது நவீன திருமணச் சடங்கில் கலந்து கொண்டதுண்டா?
2. திருமணங்களில் உங்களுக்கு மிகவும் பிடித்தது என்ன?
3. உங்களுக்குத் திருமணப் பாரம்பரியங்களைப் பற்றி ஏதாவது தெரியுமா?

சீனத் திருமணங்கள் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-chineseweddings

யுரேசியத் திருமணங்கள் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-eurasianweddings

தமிழ்-இந்து திருமணங்கள் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-tamilhinduweddings

மலாய் திருமணங்கள் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk4-malayweddings

மூத்த சமூகத்தின் ஆற்றலை அங்கீகரித்து, அவர்கள் அர்த்தமுள்ள, நிறைவான வாழ்க்கை வாழ இயலச் செய்யும் நோக்குடன் சமூகப் பராமரிப்புப் பங்காளிகளுடன் மேற்கொள்ளப்படும் முனைப்பு.

**இம்முனைப்பை மேற்கொண்டோர்:**

National Heritage Board